DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 216/2014 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.1 |
| Name | :சித்தன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2023

-----

(எதிரிகள் 1முதல் 6 வரை ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் நடுமுதலைக்குளத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 13.06.2013 மாலை 4.00 மணிக்கு என் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு போய்கொண்டிருந்தேன். எதிரி இளங்கோவன் வீட்டிற்கு போகும் போது ஆஜர் எதிரிகள் கும்பலாக தாக்க வந்தார்கள். நான் ஓட முயன்ற போது கத்தியை கொண்டு கருப்பன் தலையில் செத்துப்போடா எனச் சொல்லி வெட்டினார். எதிரி ஜெயபிரகாஷ் கடப்பாரியால் ஓங்கி தலையில் அடித்தார் நான் விலகியதால் தோள்பட்டையில் பட்டு காயம்பட்டது. எதிரி ஜெயபிரகாஷ் வயது 17 என்பவர் கம்பியால் என்னை

ஓங்கி அடித்தார். நான் கையால் தடுத்த போது எனது வலது கையில் காயம் பட்டது. மற்ற எதிரிகள் என்னை ஓட விடாமல் தடுத்து வைத்திருந்தார்கள். பின்பு பொதுமக்கள் விலகி விட்டார்கள். நான் எனக்கு ஏற்பட்ட காயம் குறித்தும் சம்பவத்திற்கு விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். காட்டப்படும் புகார் நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான் அது அ.சா.ஆ.1ஆகும். அதன்பிறகு போலிசார் என்னை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்தார்கள். காட்டப்படும் பட்டாகத்தி தான் எதிரி கருப்பு என்னை தாக்க பயன்படுத்தியது அது சா.பொ.1. காட்டப்படும் கம்பி எதிரி ஜெயபிரகாஷ் பயன்படுத்தியது அது.சா.பொ.2 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

எனக்கும் 1ம் எதிரி கருப்பையாவுக்கும் கோவில் விசயமாகவும், நாடகம் விசயமாகவும் தகராறு ஏற்பட்டு 18.06.2012-ம் தேதி நான் எதிரி அடித்த காயப்படுத்தியதாக என் மீதும் மற்றவர்கள் மீதும் குற்ற எண்.55/2012-ல் விக்கிரமங்கலம் காவல்நிலையத்தில் எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது பொய் வழக்காகும். சம்பவம் நடந்த 03.06.2013 அதே தினத்தன்று 1வது எதிரியின் வீட்டின் முன்பாக சென்று நாங்கள் 1வது எதிரியை அடித்து காயப்படுத்தியதாக புகார் கொடுக்கப்பட்டு விக்கிரமங்கலம்

காவல்நிலையத்தில் கு.எண்.59/13ல் இ.த.ச.பிரிவு 147,148,294(பி),324,307ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்கு. நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தது போன்றது தான் கொடுத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் பொழுது அந்த தெருவில் உள்ள இளங்கோவன், கார்கேம், பாண்டி, பால்ராஜ் ஆகியோர்களுக்கும் சம்பவம் தெரியுமா என்றால் யார்யார் இருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் கிழமேல் தெருவில் தான் 1ம் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். என்னை வெட்டும் பொழுது காட்டப்படும் பட்டாகத்தியை வைத்து தான் வெட்டியதாக என்னுடைய புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை தாக்கிய பின்பு எதிரிகள் எந்த பக்கம் ஓடினார்கள் என்றால் நான் மயங்கி விட்டதால் எனக்கு தெரியாது. நான் மயங்கியவிட்டதால் என்னை முதன்முதலில் என்னை எங்கு கொண்டு சென்றார்கள் என்றால் காவல்நிலையத்திற்கு தான் கொண்டு சென்றார்கள். அரசு மருத்தவரிடம் சம்பவம் மாலை 4.30 மணிக்கு நடந்ததாக சொன்னேனா என்றால் 4.00 மணிக்கு நடந்ததாக சொன்னேன். 03.06.2013-ம் தேதி மாலை 4.30மணிக்கு நானும் என்னை சேர்ந்தவர்களும் பயங்கர ஆயுதங்களுடன் கூட்டமாக 1ம்

எதிரியின் வீட்டின் முன்பாக சென்று வாய் வித்தியாசமாக பேசி அடித்து காயப்படுத்தினோம் அவர்கள் கொடுத்த புகாரில் தப்பிக்க வேண்டும் என்பதற்காக தப்பி ஓடும் போது கீழே விழுந்தததில் தான் தலை மற்றும் மற்ற இடங்களில் காயம் ஏற்பட்டது என்றாலும், அதனை மறைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும் போது 1ம் எதிரி கருப்பையாவும் காயத்தோடு அங்கு வந்திருந்தார் என்றால் அவருக்கு காயம் இல்லை வந்திருந்தார். சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்படும் நபர்கள் அனைவரும் என்னுடைய உறவினர்கள் என்பதால் சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளின் பெயர் விபரங்களை கூறாமல் மறைத்து மேற்படி உறவினர்களை சாட்சியாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 22.06.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.